**நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலர் செயல்முறைகள்**
**பிறப்பிப்பவர். திரு. க. மதிவாணன், எம்.எஸ்ஸி., எம்.எட்., எம்.பில்.,**

ப.மு.எண்: **8788/அ1/2021,** நாள்: **10.01.2022**

**பொருள் :** தமிழ்நாடு அமைச்சுப்பணி – பணிவரன்முறை – பாப்பாகோயில் அரசு உயர்நிலைப்பள்ளி–இளநிலை உதவியாளர் திரு. இரா. வெங்கடசுப்பிரமணியன் – இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குதல்– சார்பு.

**பார்வை :**
1. அரசாணை நிலை எண். 101 பள்ளிக்கல்வித் (வரவு செலவு –I) துறை நாள். 18.05.2018
2. சென்னை – 3, தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையக்குழு செயலாளரின் கடிதம் எண் 2563/ PSD –12 / 2020, நாள் 21.07.2020
3. நாகப்பட்டினம் முதன்மைக்கல்வி அலுவலரின் செயல்முறைகள் ந.க.எண் 3715/அ1/2020 நாள் 17.09.2020.
4. நாகப்பட்டினம் மாவட்டக்கல்வி அலுவலரின் ந.க.எண் 6310/ அ1/ 2021 நாள் 21.10.2021

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2018 –2019 மற்றும் 2019–2020ஆம் ஆண்டில் நடத்தப்பட்ட தொகுதி IV தேர்வுக்குட்பட்ட பணிகளுக்கான தேர்வில் தேர்ச்சி பெற்று, இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு பணிபுரிந்து வரும் கீழ்க்காணும் பணியாளருக்கு இளநிலை உதவியாளர் பணியில் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பணிவரன்முறை செய்து ஆணை வழங்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் மற்றும் பதவி | தேர்வு வாரிய வரிசை எண் | பணியில் சேர்ந்த நாள் | பணிவரன்முறை செய்யப்படும் நாள் |
|---|---|---|---|---|
| 1 | திரு.இரா. வெங்கடசுப்பிரமணியன்<br>இளநிலைஉதவியாளர்,<br>அரசு உயர்நிலைப் பள்ளி,<br>பாப்பாகோயில் | 231 | 21.09.2020 மு.ப | 21.09.2020 மு.ப |

<u>நிபந்தனைகள்</u>

1. நியமனம் பெற்ற நாளிலிருந்து இரண்டாண்டு காலத்திற்குள் மாவட்ட அலுவலக நடைமுறை நூல் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும்.

2. மூன்றாண்டு தொடர் பணிக்காலத்தில் இரண்டாண்டுகள் தகுதிகாண் பருவத்தில் இருப்பார். தகுதிகாண் பருவக்காலத்திற்குள் பவானிசாகர் அடிப்படை பயிற்சியினையும் கண்டிப்பாக தேர்ச்சி பெற வேண்டும்.

3. பணிவரன்முறை தொடர்பான பதிவுகளை தொடர்புடையவரின் பணிப்பதிவேட்டில் பதிவு செய்ய தொடர்புடைய தலைமை ஆசிரியருக்கு தெரிவிக்கப்படுகிறது.

இணைப்பு: தொடர்புடையவரின் பணிப்பதிவேடு – 1

முதன்மைக் கல்வி அலுவலர்,
நாகப்பட்டினம்

பெறுநர் : திரு.இரா.வெங்கடசுப்பிரமணியன், இளநிலை உதவியாளர், அரசு உயர்நிலைப்பள்ளி, பாப்பாகோவில் (தலைமை ஆசிரியர் வழியாக)

நகல் : தலைமை ஆசிரியர் அரசு உயர்நிலைப்பள்ளி, பாப்பாக்கோயில்

நகல் : மாவட்டக்கல்வி அலுவலர், நாகப்பட்டினம்